*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*16 (1), 2023*

# சமுர்த்திச் செயற்பாடுகளும் மக்களின் வறுமை ஒழிப்பும்: ஊர்காவற்றுறை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வு

**பானுசிறி ஸ்ரீகந்தராசா[1] & சசீலா பாலகோபி[2]**

[1]பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.
[2]நிதியியல் துறை, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

Correspondence: saseelab@univ.jfn.ac.lk.

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கையானது நடுத்தர வருமானமுடைய அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருப்பதுடன் நுண்நிதி மற்றும் சமூகம் சார்ந்த உதவிச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. வறுமை ஒழிப்பு என்பது பெரும்பாலான நாடுகளுக்கு மிகப்பெரிய சவாலாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் மக்களினுடைய வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வினுடைய பிரதான நோக்கமாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிலுள்ள மக்களின் வறுமை ஒழிப்பில் சமுர்த்திச் செயற்பாடுகள் எவ்வாறான தாக்கத்தைக் கொண்டுள்ளது என்பதனைக் கண்டறிவதாகும். ஆய்வினுடைய பெறுபேற்றைப் பரிசீலனைசெய்வதற்காக சமுர்த்தி திணைக்களத்தினால் வழங்கப்படும் நுண்கடன், நுண்சேமிப்பு, நுண்காப்புறுதி, ஏனைய நலத்திட்டங்கள் ஆகிய நான்கு செயற்பாடுகளும் வறுமை ஒழிப்பில் எவ்வாறான தாக்கத்தினை செலுத்துகின்றது என்பதனை அறிவதற்கான மாறிகளாகப் பயன்படுத்தப்பட்டது. கொத்தணி மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி, ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதினைந்து கிராம சேவையாளர் பிரிவுகளில் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு, எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 100 சமுர்த்திப் பயனாளிகளுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ் ஆய்வில் கணியரீதியிலான முறைகள் பயன்படுத்தப்பட்டது. ஆய்வின் முடிவினைப் பெற்றுக்கொள்வதற்காக இணைவுப் பகுப்பாய்வு மற்றும் பிற்செலவுப் பகுப்பாய்வு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன. பிற்செலவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் நுண்கடனானது வறுமை ஒழிப்பில் நேரான தாக்கத்தையும், நுண்காப்புறுதியானது எதிரான தாக்கத்தையும் கொண்டுள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ் ஆய்வறிக்கையினுடைய பெறுபேறுகளானவை அரசாங்கமானது சமுர்த்திச் செயற்பாட்டினுடைய கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் வினைத்திறனான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் உதவியாகக் காணப்படும். சமுர்த்திச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய உத்தியோத்தர்களுக்கு பொதுமக்கள் எதிர்நோக்கும் வறுமை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தி திணைக்களத்தினுடைய இலக்கினை அடையக்கூடியவாறு பயனுறுதிமிக்க சேவையை வழங்குவதற்கும் வழிகாட்டும்.*

***பிரதான சொற்கள்:*** *நுண்கடன், நுண்சேமிப்பு, நுண்காப்புறுதி, வறுமை ஒழிப்பு.*

### 1. அறிமுகம்

சமுர்த்தி வறுமை ஒழிப்புத் திட்டமானது 1995 ஆம் ஆண்டு தொடக்கம் தற்பொழுது வரை இலங்கையில் நடைமுறையிலுள்ள முக்கியமான ஒரு செயற்பாடாக காணப்படுகின்றது. வறுமை என்பது உலக வங்கியினுடைய ஆண்டறிக்கையின்படி, ஒருநபர் உயிர்வாழ குறைந்தபட்சம் 1.9 டொலர் நாளாந்தம் தேவைப்படுகின்றதெனவும் அதனைப்பெற்றுக்கொள்ள முடியாத தரப்பினரே வறுமை நிலைமையில் உள்ளனர் எனவும் வரையறுக்கப்படுகின்றது. உயிர்வாழ்வதற்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றைக்கூட பெறமுடியாத தரப்பினரும் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களாவார்கள். தற்பொழுது உலக சனத்தொகை அண்ணளவாக 7.9 பில்லியன் ஆகக் காணப்படுகின்றது. அதில் 9.2% ஆன (689 மில்லியன்) மக்கள் நாளொன்றுக்கு 1.9 டொலருக்கும் குறைவான வருமானத்தினையே பெறுகின்றனர் (உலக வங்கி, 2020). இலங்கையில் 2019 ஆம் ஆண்டு 0.4% ஆனோர் 1.9 டொலருக்குக் குறைவான வருமானத்தினைப் பெற்றனர். மேலும், 1000 குழந்தைகளில் 7 குழந்தைகள் ஐந்து வயதினைப் பூர்த்தி செய்ய முன்னரே வறுமையால் இறந்தனர் (இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரங்கள் திணைக்களம், 2021). உலகளாவிய ரீதியில் உற்பத்தியின் அளவு, உற்பத்தித்திறன் என்பன அதிகரித்துள்ளபோதிலும் வறுமையானது அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இது அபிவிருத்திக்கும் சமாதானத்திற்கும் எதிரான பாரிய அச்சுறுத்தலாகவும் சவாலுமாகக் காணப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி என்ற விடயத்திற்கப்பால் வறுமை என்பது மிகவும் அச்சுறுத்தலாகக் காணப்படுவதனால் நாடானது வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவேண்டிய தேவை காணப்படுகின்றது.

முக்கியமாக Covid – 19 எனும் உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட வறுமையிலிருந்து மீண்டெழ இன்னும் பல ஆண்டுகள் செல்லுமென உலக வங்கியின் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்திலும் நாட்டின் அபிவிருத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. இதனடிப்படையில் இத்தொற்றானது 2020 ஆம் ஆண்டு 97 மில்லியன் மக்களை தீவிர வறுமைக்கு உட்படுத்தியது எனவும் உலக வங்கி மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பல பரிமாணத்தையுடைய வறுமையானது ஒரு நபரது வருமானம் வறுமைக்கோட்டிற்கு மேற்பட்ட நிலைமையில் காணப்படும் போதும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு, அடிப்படைக்கல்வி, மருத்துவ வசதி, தங்குமிட வசதி, மின்சார வசதி, தூய குடிநீர், முறையான கழிப்பறைகள், பிறக்கும் குழந்தைகளின் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகளுக்கு குறைவானது போன்ற காரணிகளில் ஏதேனும் மூன்றினை இழந்தால் ஏழை எனக் குறிப்பிடுகின்றது.

உலக வறுமையில் 22% ஆன மக்கள் அதாவது 1.3 பில்லியன் மக்கள் வளர்ந்து வரும் 107 நாடுகளில் உள்ளனர் எனவும் சப்சஹரான் ஆபிரிக்காவில் 40% மக்கள் 1.9 டொலர் வருமானத்தில் வாழ்வதாகவும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் 2015 முதல் 2018 வரை சிரியா, ஜேர்மன் நாட்டு நெருக்கடிகளால் 3.8% ஆக இருந்த வறுமையானது 7.2% ஆக இரட்டிப்பாகியுள்ளது எனவும் உலக வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக வங்கியின் (2020) தகவலின்படி 40% க்கும் மேற்பட்டவர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழ்கின்றனர் எனவும் உலகிலுள்ள ஏழைகளில் 67% ஆன மக்கள் ஆரோக்கியமற்ற சூழலில் வாழ்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வறுமையில் வாடும் 15 வயதிற்கு மேற்பட்ட 70% ஆன மக்களால் அடிப்படைக்கல்வியையே பெறமுடியாமலுள்ளது. சப்சஹரான் ஆபிரிக்கா மற்றும் தெற்காசியாவில் 84.3% ஆன மக்களில் பெருமளவிலானோர் ஏழைகளாக வாழ்வதாகவும் 644 மில்லியன் குழந்தைகள் பல பரிமாண வறுமையை அனுபவிப்பதாகவும் உலக வங்கியின் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.

இதற்குமேலாக பாலினம், இயலாமை, இனம் போன்ற சமூக சக்திகளும் வறுமைப் பிரச்சனையை அதிகரிக்கின்றன. வறுமையில் வாடும் தனிநபர்களை ஏனைய சமூக பிரச்சனைகளான இயற்கை

சூழலினால் ஏற்படும் விளைவு, தட்ப வெப்ப மாற்றம், வானிலை மாற்றம் போன்றவையும் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான மோசமான வறுமை நிலைமையை சீர்செய்ய சிறந்த வழிமுறையாக உலக நாடுகளால் கையாளப்பட்டு வரும் உத்தியாக நுண்நிதியியல் காணப்படுகின்றது. நுண்நிதியியல் எனப்படுவது ''குறைந்த வருமானம் உடையவர்களுக்கு நிதி சேவைகளை வழங்குதல்'' ஆகும். நுண்நிதியியலானது உற்பத்தித்திறனான செயற்பாட்டு நோக்கங்களை நிறைவேற்ற ஏனைய மூலங்களிலிருந்து கடன் பெறமுடியாத நிலைமையிலுள்ள வறிய மக்களுக்கு சிறியளவிலான கடன்களை வழங்கி அவர்களது சேமிப்பு மற்றும் வருமான மட்டங்களை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. வறுமையான மக்களின் உற்பத்தித்திறனான செயற்பாடுகளுக்கு நிதியீட்டமளிப்பதன் மூலம் அவர்களின் வருமானம் மற்றும் முதலீட்டுக்கான சேமிப்பு மட்டங்களை உயர்த்துகின்றது. மேலும் வறிய மக்கள் தமது சிற்றளவிலான சேமிப்புக்களை பேண நுண்சேமிப்பும், அவர்களது உற்பத்திச்செயற்பாடுகள் மற்றும் வாழ்க்கை தொடர்பான ஆபத்துக்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்காக நுண்காப்புறுதியும், இதற்கு மேலாக நுண் நிதி மாற்றுகை சேவைகளும் வழங்கப்படுகின்றது.

இலங்கை அரசானது வறுமை ஒழிப்பிற்காக காலத்திற்கு காலம் பல்வேறு உபாயங்களை கடைப்பிடித்து வருகின்றது. இதன் விளைவாக அண்டை நாடுகளை விட இலங்கையானது மனித வள அபிவிருத்தியில் முன்னேற்றகரமான ஓர் நிலைமையினை எட்டியுள்ள போதிலும் வருமானத்தில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. 1988 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறேமதாச அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கருத்திட்டமே ஜனசவிய என்னும் வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

அதனடிப்படையிலேயே 1995 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மக்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதற்கென அரச திணைக்களத்தினுடைய அனுசரணையில் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களமும் வறுமை நிவாரணத் திணைக்களமும் உருவாக்கப்பட்டது. இவ் இரு திணைக்களங்களும் ஒன்றிணைக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மிக ஏழ்மையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களது வறுமையை ஒழிக்கும் பொருட்டு அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டதே சமுர்த்தி நுண்நிதியியல் செயற்பாடுகளாகும். குறைந்த வருமானம் பெறுவோரை தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு தூண்டுவதே இதன் குறிக்கோளாகும். அக்குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு குறைந்த வருமானம் பெறுவோருக்கு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் சமுர்த்தி வங்கிக்கடன் திட்டங்களையும் வழங்குவதன் ஊடாக கிராமிய, நகர மற்றும் பிரதேச வறிய மக்களின் வாழ்வாதாரத்தை நிலைபேறாக அபிவிருத்தி செய்யும். இதன் வெளிப்பாடாக ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் சமுர்த்தி திணைக்களங்கள் தொழிற்படுகின்றன.

சமுர்த்தி அதிகார சபையின் நோக்கு வறுமை குன்றிய சுபீட்சமிகு இலங்கையை கட்டியெழுப்புதல் ஆகும். இலங்கை அரசினால் மிகுந்த பிரயத்தனத்துடன் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வரும் சமுர்த்தியின் வெற்றிக்குச்சான்றாக, சமுர்த்தி என்ற சொல்லை அறியாத மக்கள் பிரிவினரே இல்லை எனும் அளவிற்கு செயற்படுகின்றது. சமுர்த்தி என்றாலே வருமானம் குறைந்த மக்களுக்கான அரசசார் திட்டம் என இலங்கை பிரஜைகள் யாவரும் அறிந்துள்ளனர். இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காவலூர் என வர்ணிக்கப்படும் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவானது மிக மோசமான பௌதீக காலநிலை மற்றும் வளங்கள் குன்றிய பிரதேசங்களில் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

இப் பிரதேசம் 1991 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பாதிப்பிலிருந்து இன்னமும் மீள முடியாமல் இருக்கின்றது. பெரும்பாலான தீவக மக்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர். மீள்குடியேற்றம் எதிர்பார்த்தபடி துரிதமாக இடம்பெறவில்லை. மக்கள் தொகை வீழ்ச்சியுற்றது. பொருளாதார நடவடிக்கைகள் சுருக்கமடைந்தன. நலிவடைந்தோர் எண்ணிக்கை உயர்வடைந்தது.

இப்பிரதேச சமூகப்பொருளாதார கட்டமைப்பு சாதகமற்ற நிலைமையை தோற்றுவித்தது. இதனிடையே யாழ் - ஊர்காவற்றுறை வீதி அகலமாக்கப்பட்டு காப்பெற் வீதி போடப்பட்டு யாழையும் இப்பிரதேசத்தையும் இணைத்தமை புது நம்பிக்கையைப் பிறப்பித்துள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி திணைக்களம் 2004 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23 ஆம் திகதி அன்று திறந்து வைக்கப்பட்டது. பல வருடங்களாக சமுர்த்தி நுண்நிதியியல் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரையிலும் வறுமையிலிருந்து இப்பிரதேசம் மீள முடியாமல் திண்டாடுகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினுடைய 2021 ஆம் ஆண்டு குடித்தொகை வருமானப் புள்ளிவிபர நூலில் மாதாந்தம் ரூபா 6000 க்கு குறைவான வருமானம் பெறும் தரப்பினராக 2190 குடும்பங்களில் 6944 அங்கத்தவர்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த சனத்தொகையில் 64% ஆகக்காணப்பட்டனர். இது இப்பிரதேச வறுமையை உறுதிப்படுத்துகின்றது. அந்தவகையில் சமுர்த்தி நுண்நிதியியல் செயற்பாடுகள் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவினுடைய வறுமை ஒழிப்பில் எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதனை எடுத்துரைப்பதாக இவ் ஆய்வு அமைகின்றது. அந்த வகையில் ஆய்வின் வினாவானது, ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற சமுர்த்திச் செயற்பாடுகளானது எந்த அளவிற்கு வறுமை ஒழிப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? என்பதாக இருக்கின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக சமுர்த்திச் செயற்பாடுகளானது ஊர்காவற்றுறை மக்களின் வறுமை ஒழிப்பில் எவ்வாறான தாக்கத்தினை கொண்டிருக்கின்றது என்பதனை ஆராய்வதாகும்.
சில ஆய்வுகளின் முடிவுகள் வறுமை மற்றும் சமுர்த்திச் செயற்பாடுகளுக்கு இடையில் கணிசமானளவு தொடர்பு இல்லை என்பதனைக்காட்டுகின்றது. அந்தவகையில் ஆய்வுகளின் முடிவுகளுக்கிடையில் ஒரு முரணான தன்மை காணப்படுகின்றது. எனவே ஆய்வுப்பிரச்சனையான சமுர்த்தி நடவடிக்கைகள் வறுமை ஒழிப்பில் செல்வாக்கு செலுத்துகின்றதா என்பதனைக் கண்டறிய இவ் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

### வறுமை ஒழிப்பில் சமுர்த்தியின் நடவடிக்கைகள்

காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட ஆய்வாளர்களால் சமுர்த்தி நடவடிக்கைகள் மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அம்பாறை மாவட்டத்தின் விவசாய மக்களின் வறுமையில் சமுர்த்தி நடவடிக்கைகள் தாக்கத்தை செலுத்துகின்றது என்ற தலைப்பிலான ஆய்வுக்கற்கையானது ரிஸ்பி மற்றும் ஜெயசிங்க (2010) என்போரால் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது மக்கள் சமுர்த்தி நுண்கடனைப்பெறுவதில் எதிர்நோக்கும் சவால்களை சுட்டிக்காட்டி வறுமை ஒழிப்பில் சமுர்த்தி நுண்நிதி நடவடிக்கைகள் கணிசமானளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என கண்டறியப்பட்டது.

தவராசசிங்கம் மற்றும் பாலகோபியினால் (2020) வறுமைத்தணிப்பில் சமுர்திச் செயற்பாடுகளின் தாக்கம் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாய்வில் யாழ்ப்பாணத்தில் கோப்பாய் பிரதேசத்தில் 06 கிராம சேவையாளர் பிரிவில் இருந்து 177 மாதிரிகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டனர். ஆய்வின் முடிவாக நுண்கடன் மற்றும் நலன்புரிச் செயற்பாடுகள் நேரான பொருண்மைப் பெறுமதியில் வறுமை ஒழிப்பில் தாக்கத்தைச் செலுத்துகின்றது எனவும் வாழ்வாதார நடவடிக்கைகளில் அபிவிருத்தி தேவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வீரசிங்க மற்றும் ஹர்சாயினால் (2017) குருநாகல் மாவட்டத்தில் நுண்நிதி பங்குதாரர்களை கொண்டு வாழ்க்கைத்தரத்தில் நுண்நிதியின் தாக்கம் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தில் மாறிகளாக தெரிவுசெய்யப்பட்ட நுண்கடன், ஆலோசனை நடவடிக்கை, நுண்சேமிப்பு என்பன குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு செலுத்துகின்றது என கண்டறியப்பட்டது.

கிருஷாந்தி, ராஜபக்ச மற்றும் சாகோவினால் (2016) நுண்நிதியும் வறுமை ஒழிப்பும் எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தில் நுண்நிதி நேரான தாக்கத்தினை கொண்டுள்ளது என கண்டறியப்பட்டது. ஆனால், பேரேராவினால் (2018) வாழ்க்கைத்தரத்தில் நுண்நிதி செயற்பாடுகளின் தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பதுளையில் பிராந்திய அபிவிருத்தி வங்கியினுடைய 100 வாடிக்கையாளர்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்வின் முடிவாக நுண்நிதி கடன் தவிர்ந்த ஏனைய வேறு சில காரணிகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பாதிப்பதனால் நுண்நிதிச் செயற்பாடுகளின் பங்கு முக்கியத்துவம் பெறவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

திப்போற்றுவாவா et al. (2012) இனால் இலங்கையில் சமுர்த்தி நடவடிக்கை பற்றிய மதிப்பீடு எனும் தலைப்பில் நடாத்தப்பட்ட ஆய்வில், சமுர்த்தி சேவைகளை வழங்குவதில் பல்வேறு குறைபாடுகள் மற்றும் அரசியல் தலையீடுகள் இருந்த போதிலும் சமுர்த்தி செயற்பாடுகளானது குடும்ப வருமானத்தின் நலன்கள், நுகர்வு, சுகாதாரம், கல்வி, மற்றும் வீட்டு நலத்திட்டம் என்பவற்றில் கணிசமானளவு செல்வாக்கை கொண்டுள்ளது என கண்டறியப்பட்டது. மேலும், இலங்கையில் சமுர்த்தி கடன் நடவடிக்கைகளானது பெண்களுக்கு அதிகாரமளித்து பல்வேறுபட்ட வாய்ப்புகளை வழங்குவதில் பெருமளவு பங்கை வகிக்கின்றன என குணவர்த்தனவால் (2014) மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டது. மிக முக்கியமாக ஏழைப்பெண்களுக்கு கடன்களினை வழங்குவது அவர்களின் குடும்ப வருமானம் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது. குமாரி (2014) என்பவரினால் இலங்கையில் நுண்நிதியானது சிறு தொழில் முயற்சியாளர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற விடயம் தொடர்பாக ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. சமுர்த்தி நடவடிக்கைகளானது வருமான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான பங்களிப்பினை வழங்குவதுடன், பல்வேறுபட்ட வேலை வாய்ப்புக்களையும் கிராமியப் பெண்களுக்காக உருவாக்குகின்றது என அவருடைய ஆய்வில் கண்டறியப்பட்டது.

ஜெயசூரியவினால் (2007) இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கை அரசானது சமுர்த்தியை மிகப்பெரிய நுண்நிதி நடவடிக்கையாக நடைமுறைப்படுத்தியதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கற்கையின் பிரதான குறிக்கோளாக இலங்கையில் நுண்நிதியானது வறுமை ஒழிப்பில் தாக்கம் செலுத்துகின்றது என்பது தொடர்பாக ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வுக்கற்கையில் சமுர்த்தியினுடைய நுண்நிதிச்செயற்பாடுகளானது வறுமை ஒழிப்பில் தாக்கம் செலுத்துகின்றது என்ற கண்டுபிடிப்பானது உறுதிசெய்யப்பட்டது. மேலும், சமுர்த்தி கடன் திட்டத்தினால் மக்களினுடைய நடைமுறை வாழ்வானது நிலைநிறுத்தப்படுகின்றது எனவும் கண்டறியப்பட்டது. பெரும்பாலான வாடிக்கையாளர்கள் அவர்களின் திட்டத்தை அபிவிருத்தி செய்ய பாரிய கடன்களை எதிர்பார்க்கின்றார்கள் எனவும், சிலர் மேலதிகமான வேலைவாய்ப்புக்களை இக்கடன் திட்டத்தின் ஊடாக உருவாக்குகின்றனர் எனவும், சில இளைஞர் யுவதிகள் இத்திட்டத்தின் கீழ் கவரப்பட்டு சேமிப்பு பழக்கத்தை அபிவிருத்தி செய்கின்றார்கள் எனவும், இவை யாவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்துகின்றன எனவும் குறிப்பிடப்பட்டது.

கேசவராயா (2011) என்பவரினால் இலங்கையினுடைய வறுமை பற்றியும் பொருளாதார நிலைமை பற்றியும் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் குறிக்கோளானது, இலங்கை அரசாங்கத்தின் சமுர்த்திச் செலவீனங்கள் வறுமைக்குறைப்பில் தாக்கம் செலுத்துகின்றதா என்பதனை வெளிச்சம் போட்டுக்காட்டுவதாகும். சமுர்த்தி நடவடிக்கைகள் வறுமைக்குறைப்பில் போதுமானளவு பங்களிப்பினை வழங்கவில்லை என்ற முடிவானது பெறப்பட்டது. சமுர்த்தியின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் வினைத்திறனற்றதாகவும் சமுர்த்தி நடவடிக்கைகள் குறைபாடுடையனவாகவும் பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையற்றதாகவும் காணப்படுகின்றன என கண்டறியப்பட்டது. உள்ளூர் அரசியல்வாதிகளின் செல்வாக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் மீது தாக்கம்

செலுத்தப்படுவது கண்டறியப்பட்டது. சமுர்த்தி நிர்வாக தெரிவு மற்றும் சமுர்த்தி பயனாளிகளின் தெரிவு இரண்டிலும் அரசியல்வாதிகளின் செல்வாக்கு தாக்கம் செலுத்தி தலையிடுகின்றது. முக்கியமாக சமுர்த்தி நடவடிக்கையானது மீள்வடிவமைக்கப்பட்டு வறுமையை குறைத்து வேறு அபிவிருத்தி இலக்குகளை சந்திப்பதற்கும் மனிதவள அபிவிருத்தி, தொழிலாளர்களின் உற்பத்தித்திறன், கல்வி மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்பட்டது.

தமயந்தி (2014) என்பவரது ஆய்வில் சமுர்த்தி நடவடிக்கைகளில் தீவிரமான அரசியல் தலையீடுகளினால் இலக்கை அடையமுடியாமை, வெளிப்படைத்தன்மையின்மை, பொறுப்பற்றதன்மை, வினைத்திறனின்மை, விளைதிறனின்மை என்பன சமூக நீதி மற்றும் குடிமக்களை பாதிப்புக்குள்ளாக்குகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாய்வுக் கற்கையின் நோக்கமானது இலங்கையில் சமுர்த்தி நடவடிக்கைகள் மூலமாக வறுமை ஒழிப்பில் ஈடுபடும் பொழுது அரசின் தலையீடுகள் பெருமளவிலான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாக ஆராய்வதாகும்.

பெர்ணான்டோ (2014) என்பவர் தனது ஆய்வில் சமுர்த்தி நடவடிக்கைகள் திருப்திகரமான அளவில் அதன் நோக்கங்களை அடையவில்லை என கண்டறிந்தார். மேலும், தமயந்தி மற்றும் சம்பிக்க (2014) ஆகியோரின் ஆய்வுகளானது வறுமை தணிப்பில் சமுர்த்தி வங்கியின் ஒத்துழைப்பு பற்றியும் அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் முகம்கொடுக்கும் பிரச்சனைகளைப் பற்றியும் மதிப்பீடு செய்தது. சமுர்த்தி நடவடிக்கை காரணமாக கிட்டத்தட்ட 57% ஆன வங்கியினுடைய வாடிக்கையாளர்களின் குடும்ப வருமானமானது அதிகரித்ததுடன் 38% ஆன சொத்துக்கள் அதிகரிக்க ஒத்துழைப்பு வழங்கியது என கண்டறியப்பட்டது.
ரிவ் (2005) என்பவரால் உணவு முத்திரையும் நுண்நிதி நடவடிக்கைகளும் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வு அறிக்கையில் ஆளும் கட்சிக்கு வாக்களிக்கும் வாய்ப்புள்ள குடும்பங்களுக்கு அதிக வசதி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றது என குறிப்பிடப்படுகின்றது. இந்த அரசியல் விளைவினால் ஏழை அல்லாத குடும்பங்களுக்கு சமுர்த்தி நன்மைகள் ஒதுக்கப்பட்டு இருந்தது. சமுர்த்தி நுண்நிதி நடவடிக்கைகள் வறிய குடும்பங்களுக்கான உணவு நுகர்வில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என சுட்டிக்காட்டப்படுகின்றது. அதேவேளை உணவு முத்திரை நடவடிக்கை மொத்த செலவில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட தரப்பினரால் சமுர்த்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் சமுர்த்தி செயற்பாடுகள் வறுமை ஒழிப்பில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பான முடிவுகள் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினை அடிப்படையாகக்கொண்டு இது தொடர்பாக இதுவரையிலும் எதுவிதமான ஆய்வுளும் மேற்கொள்ளப்டாமையினால் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

முன்னைய ஆய்வுகள், கோட்பாடுகள் மற்றும் ஆய்வு மாதிரியை அடிப்படையாகக்கொண்டு மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை ஆய்வு செய்வதற்கு கருதுகோள்களானது உருவாக்கப்படுகின்றது.

**$H_1$**: வறுமை ஒழிப்பில் நுண்கடனானது கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**$H_2$**: வறுமை ஒழிப்பில் நுண்சேமிப்பானது கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**$H_3$**: வறுமை ஒழிப்பில் நுண்காப்புறுதியானது கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**$H_4$**: வறுமை ஒழிப்பில் ஏனைய நலத்திட்டங்கள் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

## 4. ஆய்வு முறையியல்

### ஆய்வுக் குடித்தொகை மற்றும் மாதிரி

ஆய்வு நோக்கத்திற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேசம் ஆய்வுப் பிரதேசமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. சமுர்த்தியானது ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவினுடைய வறுமை ஒழிப்பில் எவ்வாறான பங்கினை வகிக்கின்றது என்பதனை அறியும் நோக்கத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டது. ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினுடைய புள்ளிவிபரக் கணக்கெடுப்பின் படி 31.12.2021 ஆம் ஆண்டு 3,415 குடும்பங்களில் 10,884 அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் 5,294 (48.64%) பேர் ஆண்களாகவும் 5,590 (51.36%) பேர் பெண்களாகவும் உள்ளனர். அத்துடன் 19 வயது வரை 3174 பேரும், 20 – 29 வயது வரை 2068 பேரும், 30 – 44 வயது வரை 2306 பேரும், 45 – 59 வயது வரை 1603 பேரும், 60 – 74 வரை 1304 பேரும், 75 வயதிற்கு மேல் 429 பேரும் வசிக்கின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் சமுர்த்திப் பயனை மாதாந்தம் பெற்றுக்கொள்கின்ற 1,967 குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாக இருக்கின்றனர். ஆய்வின் நோக்கத்தையடைவதற்காக கொத்தணி மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. அதாவது, ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிலுள்ள 15 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து 04 கிராம சேவகர் பிரிவுகள் (ஊர்காவற்றுறை (J/49), பருத்தியடைப்பு (J/50), நாரந்தனை வடமேற்கு (J/56), நாரந்தனை (J/57) தெரிவுசெய்யப்பட்டன. அந் நான்கு கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து சமுர்த்தி மாதாந்த நலனைப் பெறும் 100 பேர் ஆய்வு கற்கையின் தகவலை பிரதிநிதித்துவப்படுத்துவற்காக எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டனர். இவ் ஆய்வில் கணியரீதியிலான முறைகள் பயன்படுத்தப்பட்டது.


### தரவு சேகரிப்பு

இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக வறுமை ஒழிப்பில் சமுர்த்திச் செயற்பாடுகள் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதனை இனங்காண்பதற்கு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து வினாக்கொத்து மூலமாக இவ் ஆய்விற்கு தேவையான முதன்மைத்தரவானது சேகரிக்கப்பட்டது. வினாக்கொத்தானது எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளால் நிரப்பப்பட்டது.

இரண்டாம் நிலைத்தரவுகளாக பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட புள்ளிவிபர கைநூல் தரவுகள் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் மற்றும் சமுர்த்தி திணைக்கள வலையமைப்புக்களில் இருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்து மூலமாக சேகரிக்கப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்கான புள்ளிவிபர மென்பொருள் (SPSS) மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

### கருத்துருவாக்கம் (Conceptual Framework)

கருத்துருவாக்கமானது சமுர்த்தி செயற்பாடுகள் மற்றும் வறுமை ஒழிப்பு என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை விபரிக்க ஒரு கட்டமைப்பினை வழங்குகின்றது. இங்கு சமுர்த்திச் செயற்பாடுகள் சாராத மாறியாகவும் வறுமை ஒழிப்பானது சார்ந்த மாறியாகவும் கருதப்படுகின்றது.




*ஆதாரம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது (2022).*
*வரைபடம் 1: கருத்துருவாக்கம்*

## செயல்முறைப்படுத்தல் (Operationalization)

*செயல்முறைப்படுத்தலானது சார்ந்தமாறி மற்றும் சாராதமாறிகள் எவ்வாறு அளவிடப்படுகின்றது என்பதனை விபரிக்கின்றது. அட்டவணை 1 ஆனது ஆய்வுகள் தொடர்பான எண்ணக்கருக்கள், மாறிகள், குறிகாட்டிகள், அளவீடுகள் என்பன எவ்வாறு வினாக்கொத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துகின்றது. வினாக்கொத்துக்கள் இந்த அளவீடுகளை அடிப்படையாகக்கொண்டே உருவாக்கப்பட்டது. முன்னைய ஆய்வுகளின் மீளாய்வினைப் பயன்படுத்தி கடந்தகால ஆய்வுகளில் ஆய்வாளர்களினால் பயன்படுத்தப்பட்ட மாறிகள், குறிகாட்டிகள், அளவீடுகள் போன்றன இவ் ஆய்விலே பயன்படுத்தப்பட்டது.*

*அட்டவணை 1: செயல்முறைப்படுத்தல்*

| எண்ணக்கரு | மாறிகள் | குறிகாட்டிகள் | அளவீடுகள் |
|---|---|---|---|
| சமுர்த்தி செயற்பாடுகள் | நுண்கடன்கள் | கடனின் வகை<br>கடன் தொகை<br>திருப்பி செலுத்தும் காலம்<br>கடனுக்கான வட்டிவீதம் | வினா 1 - 7 |
| | நுண்சேமிப்பு | சேமிப்பின் வகை<br>சேமிப்பு முறைமை | வினா 8 - 10 |
| | நுண்காப்புறுதி | காப்புறுதியின் வகை<br>காப்புறுதி முறைமை | வினா 11 - 13 |
| | ஏனைய நலத்திட்டங்கள் | வேலைவாய்ப்பு<br>உணவு முத்திரை<br>வீட்டுத் திட்டம்<br>வாழ்வாதார நடவடிக்கை | வினா 14 - 23 |

| | | | |
|---|---|---|---|
| | | சமூக நல கொடுப்பனவு | |
| வறுமை ஒழிப்பு | வருமானம் | மாதாந்த வருமானம்<br>நுகர்வு<br>சேமிப்பு | வினா 24 - 28 |
| | சுகாதாரம் | மருத்துவ வசதி | வினா 29 - 32 |
| | வீட்டுவசதி நிலைமை | குடிநீர்<br>மின்சாரம் | வினா 33 - 36 |
| | கல்வி நிலைமை | பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை<br>கல்வி நிலைமையில் நாட்டம் | வினா 37 - 40 |

ஆதாரம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது (2022).

### பிற்செலவு மாதிரி (Regression Model)

பிற்செலவு மாதிரி ஆனது சமுர்த்தி செயற்பாடுகள், வறுமை ஒழிப்பில் எவ்வளவு தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது என்பதனை ஆராய பயன்படுத்தப்படுகின்றது.

$$PR = \beta_0 + \beta_1 MCR + \beta_2\, MSA + \beta_3\, MIN + \beta_4\, WEL + \varepsilon$$

*PR* - வறுமை ஒழிப்பு
*MCR* - நுண்கடன்கள்
*MSA* - நுண்சேமிப்பு
*MIN* - நுண்காப்புறுதி
*WEL* - ஏனைய நலத்திட்டங்கள்
$\beta_0, \beta_1, \beta_2, \beta_3, \beta_4$- பிற்செலவுக் குணகங்கள்

### 5. தரவுகளை சமர்ப்பித்தலும் பகுப்பாய்வு செய்தலும்

### விபரணப் பகுப்பாய்வு (Descriptive Statistics)

புள்ளிவிபரரீதியான விபரணப்பகுப்பாய்வு எனப்படுவது சேகரிக்கப்பட்ட தரவுகளின் பண்புகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றினைத் தொகுத்து மைய நாட்ட அளவைகள் (இடை, இடையம், ஆகாரம்) விலகல்கள் (வீச்சு, மாறற்றிறன், நியம விலகல், காலணை) மற்றும் பரம்பல் என்பவற்றைக் கொண்டு தரவுகளின் பண்புகளை விபரிப்பதாகும்.

கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை 2 ஆனது 100 மாதிரிகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வினுடைய விபரணப்பகுப்பாய்வினைக் காட்டுகின்றது. அட்டவணை 2 இன் படி நுண்கடனுக்கான இடையானது (சராசரிப்பெறுமதி) 3.208 எனவும் நியமவிலகலானது 0.7369 எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அந்தவகையில் நுண்சேமிப்பு, நுண்காப்புறுதி, ஏனைய நலத்திட்டங்கள் மற்றும் வறுமை ஒழிப்பு என்பவற்றினுடைய இடைப்பெறுமதியானது முறையே 2.887, 1.533, 2.887, 3.545 எனவும் நியமவிலகல் முறையே 0.596, 1.001, 0.596, 0.724 எனவும் காணப்படுகின்றது.

அட்டவணை 2: விபரணப்பகுப்பாய்வு

| | குறைந்த பெறுமதி | கூடிய பெறுமதி | சாரசரி | நியம விலகல் |
|---|---|---|---|---|
| நுண்கடன் | 1.43 | 5.00 | 3.208 | .736 |
| நுண்சேமிப்பு | 1.40 | 4.50 | 2.887 | .596 |
| நுண்காப்புறுதி | 1.00 | 5.00 | 1.533 | 1.001 |
| ஏனைய நலத்திட்டங்கள் | 1.40 | 4.50 | 2.887 | .596 |
| மொத்தம் | 1.25 | 4.67 | 3.545 | .724 |

## இணைவுப் பகுப்பாய்வு (Correlation Analysis)

இவ் இணைவுப் பகுப்பாய்வானது சமுர்த்தி செயற்பாடுகள் மற்றும் வறுமை ஒழிப்பு என்ற மாறிகளுக்கிடையிலான தொடர்பினை பரீட்சிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

அட்டவணை 3: இணைவுப்பகுப்பாய்வு

| விபரம் | நுண் கடன் | நுண் சேமிப்பு | நுண் காப்புறுதி | பிறநலத் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| நுண்சேமிப்பு | 0.089<br>0.380 | | | |
| நுண்காப்புறுதி | 0.342<br>0.000 | 0.209<br>0.037 | | |
| ஏனைய நலத்திட்டங்கள் | 0.089<br>0.380 | 1.000<br>0.000 | 0.209<br>0.037 | |
| வறுமை ஒழிப்பு | 0.166<br>0.099 | 0.369<br>0.000 | -0.194<br>0.053 | 0.369<br>0.000 |

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணை 3 இன்படி மாறிகளுக்கிடையிலான இணைவுக்குணகம் மற்றும் பொருண்மைப் பெறுமதி என்பன பெறப்பட்டுள்ளன. இது பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட நுண்கடன், நுண்சேமிப்பு, நுண்காப்புறுதி, ஏனைய நலத்திட்டங்கள மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய மாறிகளினுடைய இணைவுக்குணத்தினை காட்டுகின்றது.

மேலே காட்டப்பட்ட இணைவுப்பகுப்பாய்வு அட்டவணை 3 இன்படி சமுர்த்தி நுண்கடனுக்கும் வறுமை ஒழிப்பிற்குமான இணைவுக்குணகமானது 0.166 ஆகக்காணப்படுவதுடன் பொருண்மைப் பெறுமதியானது 0.05 இனை விட அதிகமாக 0.099 எனக் காணப்படுவதனால் இவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்களவு தொடர்பில்லை. சமுர்த்தி நுண்சேமிப்புக்கும் வறுமை ஒழிப்பிற்கும் இடையிலான தொடர்பினைக்காட்டும்

இணைவுக்குணகமானது 0.369 ஆகக்காணப்படுவதுடன் பொருண்மைப் பெறுமதியானது 0.05 இனை விடக்குறைவாக 0.00 எனக்காணப்படுவதனால் இவற்றிற்கிடையில் கணிசமானளவு தொடர்புண்டு. ஆகவே சமுர்த்தி நுண்சேமிப்புக்கும் வறுமை ஒழிப்பிற்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது. அதாவது, மக்கள் நுண்சேமிப்பினை அதிகரிக்கின்ற பொழுது அவர்களுடைய வறுமையினை ஒழிக்கக்கூடியதாக இருக்கின்றது.

சமுர்த்தி நுண்காப்புறுதிக்கும் வறுமை ஒழிப்பிற்குமான இணைவுக்குணகமானது -0.194 ஆகக்காணப்படுவதுடன் இதன் பொருண்மைப் பெறுமதியானது 0.05 இனை விட அதிகமாகக் காணப்படுவதனால் இவ் இரண்டு மாறிகளுக்கிடையிலும் குறிப்பிடத்தக்களவு தொடர்பு காணப்படவில்லை. சமுர்த்தியினுடைய ஏனைய நலத்திட்டங்களுக்கும் வறுமை ஒழிப்பிற்குமான இணைவுக் குணகமானது 0.369 ஆகக்காணப்படுகின்றது. இதன் பொருண்மைப் பெறுமதியானது 0.05 இனை விடக் குறைவாக 0.00 ஆகக்காணப்படுவதனால் இவ் மாறிகளுக்கிடையில் கணிசமானளவு நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது. அதாவது, மக்கள் சமுர்த்தியுடைய ஏனைய நலத்திட்டங்களை பெற்றுக்கொள்கின்ற பொழுது அவர்களுடைய வறுமையினை ஒழிக்கக்கூடியதாக இருக்கின்றது.

### நம்பகத்தன்மை பகுப்பாய்வு (Reliability Test)

ஆய்விற்கான தரவுகளை சேகரிப்பதற்காக தயாரிக்கப்படும் வினாக்கொத்தினுடைய நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடியாகும் தன்மை என்பவற்றைத் தீர்மானிக்க இப் பரிசீலனை உதவுகின்றது. இங்கு Cronbach's Alpha நம்பகத்தன்மையை அளவிடும் அளவுகோலாகும்.

அட்டவணை 4: நம்பகத்தன்மை பகுப்பாய்வு

| Cronbach's Alpha | எண்ணிக்கை |
|---|---|
| 0.807 | 40 |

வினாக்கொத்து முழுவதனுடைய நம்பகத்தன்மையினை அறியும் பரிசீலனையில் Cronbach's Alpha ஆனது 0.807 ஆகக்காணப்படுகின்றது. இது வினாக்கொத்தானது சிறந்த நம்பகத்தன்மையுடையது என்ற முடிவினை வழங்குகின்றது. மேலும் ஒவ்வொரு மாறிக்களுக்குமான வினாக்களினுடைய உண்மைத்தன்மையை கீழ்வரும் அட்டவணையானது வெளிப்படுத்துகின்றது.

அட்டவணை 5: தனிப்பட்ட மாறிகளுக்கான நம்பகத்தன்மைப்பகுப்பாய்வு

| மாறிகள் | Cronbach's Alpha | வினாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நுண்கடன் | 0.680 | 7 |
| நுண்சேமிப்பு | 0.717 | 3 |
| நுண்காப்புறுதி | 0.888 | 3 |
| ஏனைய நலத்திட்டங்கள் | 0.680 | 10 |
| வருமானம் | 0.650 | 5 |

| | | |
|---|---|---|
| வீட்டுவசதி நிலைமை | 0.623 | 4 |
| சுகாதாரம் | 0.765 | 4 |
| கல்வி | 0.859 | 4 |

## பிற்செலவுப் பகுப்பாய்வு (Regression Analysis)

பிற்செலவுப்பகுப்பாய்வானது வறுமை ஒழிப்பில் சமுர்த்தி செயற்பாடுகளின் தாக்கமானது எவ்வாறாகவுள்ளது என்பதனைத் தீர்மானிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் நுண்கடன், நுண்சேமிப்பு, நுண்காப்புறுதி, ஏனைய நலத்திட்டங்கள் ஆகிய நான்கு சாராத மாறிகளையும் வறுமை ஒழிப்பு எனும் சார்ந்த மாறியையும் அடிப்படையாகக் கொண்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6: பிற்செலவுப் பகுப்பாய்வு

| மாறிகள் | நியமப்படுத்தப்பட்ட பிற்செலவுக்குணகம் (ß) | நியமத் தவறு | t | பொருண்மை பெறுமதி |
|---|---|---|---|---|
| நுண்கடன் | 0.259 | 0.092 | 2.809 | 0.006 |
| நுண்சேமிப்பு | 0.923 | 1.284 | 0.719 | 0.474 |
| நுண்காப்புறுதி | -0.274 | 0.069 | -3.970 | 0.000 |
| ஏனைய நலத்திட்டங்கள் | -0.402 | 1.280 | -0.314 | 0.754 |
| பிற்செலவு பரிசீலனைக்குணகம் ($r^2$) - 0.275<br>சீராக்கப்பட்ட பிற்செலவு பரிசீலனைக்குணகம் (Adjusted $r^2$) - 0.244<br>F பெறுமதி - 8.999 (0.000) | | | | |

அட்டவணை 6 இன்படி, பிற்செலவு பரிசீலனைக்குணகமானது ($r^2$) 0.275 ஆகவும் சீராக்கப்பட்ட பிற்செலவு பரிசீலனைக்குணகமானது (adjusted $r^2$) 0.244 ஆகவும் காணப்படுகின்றது. இவ் ஆய்வில், ஊர்காவற்றுறை பிரதேசத்தினுடைய வறுமை ஒழிப்பில் 24.40% மாத்திரமே சாராத மாறிகளான நுண்கடன், நுண்சேமிப்பு, நுண்காப்புறுதி, ஏனைய நலத்திட்டங்களால் தீர்மானிக்கப்படுவதாகவும் மிகுதி 75.60% ஆனவை இவ்வாய்வில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாத காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டுகின்றது.

அட்டவணை 6 இன்படி நுண்கடனுக்கும் வறுமை ஒழிப்புக்குமான பிற்செலவுக் குணகமானது 0.259 ஆகவும் பொருண்மைப் பெறுமதி 0.006 ஆகவும் காணப்படுகின்றது. இது 0.05 விட குறைவாக காணப்படுவதனால் நுண்கடனானது வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்களவு நேரான தாக்கத்தைக் கொண்டுள்ளது ($P = 0.006 < 0.05$). வழங்கப்படுகின்ற நுண்கடனானது அதிகரிக்கப்படுகின்ற பொழுது மக்களுடைய வறுமையானது ஒழிக்கப்படுகின்றது. எனவே, முதலாவது கருதுகோள் ($H_1$) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஏனைய நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது வட்டி வீதம் குறைவாகக் காணப்படுவதாலும் ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாலும் சமுர்த்தியில் கடனைப் பெற்றுக்கொள்ளும் அளவு அதிகரித்துள்ளது. எனவே இது மக்களுடைய வறுமை ஒழிப்பில்

நேரடியான தாக்கத்தைக் கொண்டுள்ளது. இக் கண்டுபிடிப்பானது முன்னைய ஆய்வுகளின் முடிவுகளுடன் ஒத்துப்போகின்றது (தவராசசிங்கம் மற்றும் பாலகோபி, 2020; வீரசிங்க மற்றும் ஹர்சாயி, 2017; ஜெயசூரிய, *2007*).

நுண்சேமிப்புக்கும் வறுமை ஒழிப்புக்குமான பிற்செலவுக் குணகமானது *0.923* ஆகவும் பொருண்மைப் பெறுமதியானது *0.474* ஆகவும் காணப்படுகின்றது. இது *0.05* விட கூடுதலாகக் காணப்படுவதனால் நுண்சேமிப்பானது வறுமை ஒழிப்பில் கணிசமானளவு தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. (ß= 0.923, P = 0.474 > 0.05). ஆகவே, இரண்டாவது கருதுகோள் ($H_2$) ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால், நுண்காப்புறுதிக்கும் வறுமை ஒழிப்புக்குமான பிற்செலவுக் குணகமானது *-0.274* ஆகவும் பொருண்மைப் பெறுமதியானது *0.00* ஆகவும் காணப்படுகின்றது. இது *0.05* விட குறைவாக காணப்படுவதனால் நுண்காப்புறுதியானது வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்களவு எதிரான தாக்கத்தைக் கொண்டுள்ளது (ß= -0.274, P = 0.000 < 0.05). மக்களுக்கான நுண்காப்புறுதியானது அதிகரிக்கப்படுகின்ற பொழுது மக்களுடைய வறுமை ஒழிப்பும் குறைவடைகின்றது. எனவே, மூன்றாவது கருதுகோள் ($H_3$) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மக்களிடையே நுண்காப்புறுதி தொடர்பாக போதியளவு விழிப்புணர்வில்லை என்பதனால் நுண்காப்புறுதியைப் பயன்படுத்தும் மக்களின் அளவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஏனைய பிறநலத்திட்டங்களானது வறுமை ஒழிப்பில் கணிசமானளவு தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. (ß= -0.402, P = 0.754 > 0.05). ஆகவே, நான்காவது கருதுகோள் ($H_4$) ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

## *6.* ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும்

### ஆய்வின் முடிவுகள்

இவ் ஆய்வானது சமுர்த்திச் செயற்பாடுகளானது ஊர்காவற்றுறை மக்களின் வறுமை ஒழிப்பில் எவ்வாறான தாக்கத்தினை கொண்டிருக்கின்றது என்பதனை ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டதாகும். இந்த ஆய்வில் வறுமை ஒழிப்பில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான சாராத மாறிகளில் ஒன்றான நுண்கடனானது வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினைக்கொண்டுள்ளது என கண்டுபிடிக்கப்பட்டது. இந்த முடிவானது முன்னய ஆய்வுகளின் முடிவுகளை (ஜெயசூரிய, 2007; குணவர்த்தன, 2014; குணதிலக்கவும் சாலியும், *1999*) உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது.

இவ் ஆய்வில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் வறுமை ஒழிப்பில் சமுர்த்தி நுண்சேமிப்பும் ஏனைய பிறநலத்திட்டங்களும் கணிசமானளவு தாக்கம் செலுத்தவில்லை என்ற முடிவுகள் பெறப்பட்டன. பிறநலச் சேவைகள் தொடர்பான விபரங்களை மக்கள் அறிந்துள்ள போதிலும் அது தொடர்பான சந்தர்ப்ப சூழ்நிலைகள் அமையப்பெறாமையினால் தாக்க வீதமானது குறைவாக உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், நுண்காப்புறுதியானது ஊர்காவற்றுறை பிரதேச மக்களின் வறுமை ஒழிப்பில் கணிசமானளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆனால், எதிர்க்கணிய தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றது.

ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் சமுர்த்தியினுடைய நுண்காப்புறுதி தொடர்பாக எதுவித தகவலையும் அறிந்திருக்கவில்லை என்பது அவர்களுடனான கலந்துரையாடலின் போது அறியப்பட்டது. கடனைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரிடமும் கட்டாய காப்புறுதித்தொகையானது அறவிடப்படுகின்ற போதிலும் அது தொடர்பிலான எதுவித விழிப்புணர்வும் இல்லாது காணப்பட்டனர். இது தொடர்பான விடயங்களை தெரியப்படுத்தும் சந்தர்ப்பங்களில் அவர்களினால் மேலதிக நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**பரிந்துரைகள்**

வறுமை என்பது மகிழ்ச்சியில் குறைவை ஏற்படுத்தக்கூடியதும், சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு தேவையான அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு மிகக்குறைந்த வருமானத்தை கொண்டு காணப்படுவதாகும். ஊர்காவற்றுறையினுடைய வறுமை ஒழிப்பில் சமுர்த்திச் செயற்பாடுகளின் தாக்கம் எனும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் சில பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தினுடைய வறுமை நிலைமைக்கு பிரதான காரணமாக மக்கள் தொழிலின்றி காணப்படுவது இனங்காணப்பட்டுள்ளதுடன் மக்களின் தொழில் நடவடிக்கைகளில் ஏற்படும் நட்டங்கள் அதற்கடுத்த பிரதான காரணியாகக் காணப்படுகின்றது. அதிகரித்த குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் குடும்பத்தலைவர்களின் இறப்புக்கள் போன்றவை வறுமை தோற்றம் பெற காரணமாக இருக்கின்றது. இத்தகைய வறுமையானது ஆய்வுப் பிரதேசத்தில் இளையோர்களின் மீதும் பெரியோர்களின் மீதும் பெரிதும் தாக்கம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. சிறுவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய அடிப்படை விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் குடும்பத்தில் அடிக்கடி பிணக்குகள் ஏற்படல் போன்ற பல தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. இதற்கிணங்க வறிய மக்களை தொழில்பெறச்செய்வதற்குத் தேவையான பரிந்துரைகளாக பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

சிறுகைத்தொழில் முயற்சி விஸ்தரிப்புகளிற்காக வழங்கப்படும் சமுர்த்தி நுண்கடன்கள் தொழில் விஸ்தரிப்பு தவிர இதர அடிப்படைத்தேவைகளிற்குப் பயன்படுத்தப்படுவதனால், பயனாளிகளிற்கு கடன்களை வழங்க முன் இக்கைத்தொழிலாளர்களின் ஏனைய அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்யும் திட்டங்களை அரசானது அமுல்படுத்த வேண்டும். இப்பிரதேசத்தினுடைய பெரும்பாலான மக்கள் உழைக்கும் விருப்பம் குறைந்தவர்களாக காணப்படுவதனால், தொழிலிற்கு செல்லும் ஆர்வத்தை உண்டாக்கும் வகையில் பயிற்சி நெறிகள் மற்றும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல் அவசியமானதாகும். சிறு உற்பத்தி மற்றும் குடிசைக்கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வண்ணம் நுண்பாக கடனுதவிகளை வழங்கும்போது மக்களின் சுமையைக் குறைக்கும் வகையிலமைந்த நெறிமுறைகளுடனும், வட்டி வீதத்தை குறைத்தும் வழங்குதல் வேண்டும். வழங்கப்பட்ட கடன்கள் உரியமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் உடனுக்குடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சமுர்த்தியில் கடனைப்பெற்ற பயனாளிகள் மாதாந்த தவணைக்கட்டணகளைச் செலுத்தும் பொழுது அதனைப்புத்தகங்களில் பதிவு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் தெளிவின்மை காணப்படுவதாகவும் தெரிவித்தனர். தன்னியக்க இயந்திர முறையை அறிமுகம் செய்தல் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினுடைய கணணி அறிவையும் வேகத்தினையும் அதிகரிக்கும் வகையில் அவசியமான தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை காலத்திற்கு காலம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் இதற்கான தீர்வாக அமையும்.

சமுர்த்தியில் மேற்கொள்ளப்படும் சேமிப்பு நடவடிக்கைகளுக்கு கவர்ச்சிகரமான வட்டிகளை வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் அதிகளவான ஏழை மக்களை இலகுவாக வாடிக்கையாளர்களாகப்பெற்று செயற்பட முடியும். சமுர்த்திச் செயற்பாடுகளில் காப்புறுதி முக்கியமானதாகும். இது கடன் பெற்ற பயனாளிகளினுடைய இழப்புக்களை ஈடுசெய்ய உதவுகின்றது. ஆனால் அதுபற்றிய எந்தவித தகவல்களையும் ஊர்காவற்றுறை மக்கள் அறிந்திருக்கவில்லை. சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு காப்புறுதி பற்றிய போதியளவு அறிவின்மையே இதற்கு காரணமாகும். சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்ற காலம் தொடக்கம் ஒரே இடத்தில் பணிபுரிவதால் ஏற்படும் சலிப்புத்தன்மை, புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் காணப்படும் அலட்சியம் என்பன மக்களின் வாழ்வையும் நாட்டு நிலைமையையும் மோசமான நிலைமைக்கு இட்டுச்செல்கின்றது. இதனை

நிவர்த்தி செய்ய சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மக்களை வறுமையில் இருந்து விடுவிக்கவே இலவசக் கொடுப்பனவுகள் மற்றும் நிதி வசதிகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் அதனை ஆதாரமாகக் கொண்டு முன்னேறுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும். உத்தியோத்தர்கள் ஊடாக அவர்களை கண்காணித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பிள்ளைகள் வேலைக்குச் செல்லும் குடும்பங்கள், ஏற்றுக்கொள்ளக்கூடிய வருமானத்தினைப் பெறும் குடும்பங்கள் தொடர்ந்தும் சமுர்த்தி மாதாந்த கொடுப்பனவுகளை பெறுவது அவதானிக்கப்பட்டது. உடனுக்குடன் புள்ளிவிபரத்தகவல்களை திரட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். சமுர்த்தி உத்தியோகத்தர்களாக அதே பிரதேசத்தை சேர்ந்தவர்களையே நியமிப்பதால் பாகுபாடுடைய கொடுப்பனவுகளுக்கு இது வழிவகுக்கும். இதனை தடுக்ககூடிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். பொதுமக்களுக்கான சேவையை வழங்கும் உத்தியோகத்தர்கள் மிகவும் தரம்வாய்ந்தவர்களாகவும் பக்கச்சார்பற்றவர்களாகவும் வினைத்திறனானவர்களாகவும் உள்ளனர் என்பதனை உறுதிசெய்து நியமனம் வழங்கப்படவேண்டும். தவறும் பட்சத்தில் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கான சட்டங்களை உருவாக்க வேண்டும்.

பொதுவாக வறுமை ஒழிப்புத்திட்டங்கள் முழுமையாக நாடுமுழுவதும் ஒரே விதமாக மேற்கொள்ளப்படுதல் தவறான விடயமாகும். ஏனெனில் பிரதேசத்திற்கு பிரதேசம் காலநிலை, பிரதேச வளங்கள், தொழில்வாய்ப்பு, தொழில்செய்யும் முறை, பழக்கவழக்கம் என பலதரப்பட்ட வேறுபாடுகள் காணப்படுவதால், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கென வடிவமைக்கப்பட்ட சமுர்த்தி வறுமை ஒழிப்புத்திட்டமானது ஏனைய பல பிரதேசங்களிற்கு பொருத்தமற்றதாக காணப்படுகின்றது. எனவே, ஒரு பிரதேசத்தில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை செயற்படுத்த முன் அப்பிரதேசத்தின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை இனம்காணும் வகையிலமைந்த ஆய்வை மேற்கொண்டு அப்பிரதேசத்தின் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களை வடிவமைப்பதே ஒரு சிறந்த வறுமை ஒழிப்புத்திட்டமாக காணப்படும்.

**உசாத்துணைகள்**

Damayanthi, M. N. (2014). Good governance and poverty alleviation programmes in Sri Lanka: special reference on Samurdhi Programme. *African-Asian Journal of Rural Development, 47* (1) 43-64

Damayanthi, M. N., & Champika, P. J. (2014). An evaluation of Samurdhi Banks in poverty alleviation. *Colombo: Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute.*

Fernando, R. L. S. (2014). Poverty Reduction in Sri Lanka Evaluating the Impact of Public Policy with Reference to the Samurdhi Programme.

Gunawardane, D. S. W. (2014). Impact of the Poverty Reduction Programmes in Empowering Women: A comparative analysis on State and NGOs intervention of poverty reduction in Sri Lanka.

Jayasuriya, P. K. (2007). lmpact of the Micro Finance on Poverty Alleviation in Sri Lanka: Special Reference to SammurdhiProgramme, Proceedings of the Annual Research Symposium, Faculty of Graduate Studies, University of Kelaniya, 55.

Kesavarajah, M. (2011). Poverty and economic support in Sri Lanka: The case of samurdhi programme. Retrived from http://www. iiirr. ucalgary. ca/files/iiirr/26. pdf.

Kumari, P. J.A. (2014). The impact of microfinance on small entrepreneurships in Sri Lanka: BIOINFO Business Economics, 2(1), 06-09. DOI: 10.9735/2249-1775.

Mallika, J. K., Hongzhong, Z., & Rajapaksha, M. S. (2016). Microfinance and poverty alleviation: A review. *Journal of Management Matters, 3*(2), 1-8.

Perera, K.J.T. (2018). Impact of Micro Finance Activities to Living Standard of People in a Selected Area in Sri Lanka. *International Journal of Engineering and Management Research (IJEMR)*, *8*(2), 220-225.

Rizphy, M., & Jayasinghe-Mudalige, U. K. (2010). Impact of Samurdhi Microfinance Programme on Poverty Alleviation: A Case Study of Paddy Farmers in the Ampara District. In Proceedings of 10th Agricultural Research Symposium (Vol. 373, p. 376).

Thavarasasingam, H., & Balagobei, S. (2020). Impact of Samurdhi program on poverty alleviation: An empirical investigation of Samurdhi beneficiaries in Kopay DS division in Jaffna district. *Sabaragamuwa University Journal*, *18*(1), 30-42.

Thibbotuwawa, R. M. M. I., Printhika, B. L. D. S., Jayasinghe-Mudalige, U. K., & Udugama, J. M. M. (2012). Impact of microfinance on household welfare: Assessing the case of Samurdhi Program in Sri Lanka (No. 423-2016-27062).

Weerasinghe, I. M. S., & Dedunu, H. H. (2017). Impact of micro finance on living standard with reference to microfinance holders in Kurunegala District. *International Journal of Business Marketing and Management*, *2*(7), 16-23.